TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM

8075225

# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

C 9/AC/2021

1. District / மாவட்டம்: சேலம் PS / காவல்நிலையம்: ஊ.த.த. பிரிவு Year / ஆண்டு: 2021 FIR No / மு.த.அ. எண்: Date / நாள்: 21.06.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்
   Date from / நாள் முதல்:
   Date to / நாள் வரை: ① September 2020 ② Last week of May 2021 ③ 20.06.2021 - 07.30 Hrs.
   Time Period / நேர அளவு
   Time from / நேரம் முதல்:
   Time to / நேரம் வரை:
   (b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 21.06.2021 Time / நேரம்: 13.00 Hrs.
   (c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 21.06.2021 Time / நேரம்: 13.15 Hrs.

4. Type of Information: Written/ Oral: / தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 50 கி.மீ. கிழக்கு
   Beat Number / முறைக் காவல் எண்:
   (b) Address / முகவரி: தனி வட்டாட்சியர், முத்திரை கட்டணம் அலுவலகம், ஆத்தூர், சேலம் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District: / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: P. செல்வம்
   (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: பழனிசாமி
   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு:
   (d) Nationality / நாட்டினம்:
   (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
   Date of Issue / வழங்கப்பட்ட நாள்:
   Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
   (f) Occupation / தொழில்: விவசாய கூலி
   (g) Address / முகவரி: கதவு எண் 351, படிப்பணை, விநாயகர் கோவில் போஸ்ட், பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, சேலம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. செந்தில், வருவாய் ஆய்வாளர், தனி வட்டாட்சியர் அலுவலகம், முத்திரை கட்டணம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. P. அனுபமா Rank காவல் ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS ஊ.த.க.பிரிவு, சேலம் on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ம. செல்வம் 21.6.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

N. Narendran 21.06.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.06.2021 18.30 Hrs.

Name: பெயர் N. NARENDRAN
Rank: நிலை .................... No. எண் ..........
Inspector of Police, V&AC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 9/AC/2021 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை படிவம் வரிசை எண் 12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>: சேலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 21.06.2021 ந் தேதி 13.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, வீரகவுண்டனூர் போஸ்ட், கதவு எண். 351, பழப்பன்னையைச்சேர்ந்த பழனிசாமி மகன் திரு. P.செல்வம் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அப்புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல் P.செல்வம், த/பெ. பழனிசாமி, கதவு எண். 351, பழப்பன்னை, வீரகவுண்டனூர் போஸ்ட், பெத்தநாயக்கன்பாளையம் தாலுகா, சேலம் மாவட்டம். பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, சேலம். அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது மனைவி சாந்தி, மகன்கள் ஜெயசூர்யா, ஜெயபாரத் ஆகியோருடன் வசித்துவருகிறேன். நான் விவசாய கூலி தொழில் செய்துவருகிறேன். நான் 8 ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனது மனைவி சாந்தி வீட்டில் இருந்து வருகிறார். நான் சொந்தமாக விவசாயம் செய்வதற்காக நிலம் வாங்க வேண்டும் என்று முடிவு செய்து கடந்த 2020 ம் வருடம் செப்டம்பர் மாதம் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தாண்டவராயபுரத்தைச்சேர்ந்த குமார் என்பவருக்கு சொந்தமான 74 செண்ட் விவசாய நிலத்தில் 37 செண்ட் நிலத்தை எனது மனைவி சாந்தி பெயரில் கிரையம்பேசிமுடித்தோம். நான் வாங்கிய 37 செண்ட் விவசாய நிலத்திற்கு அருகில் உள்ள நிலங்கள் ஏற்கனவே வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு சதுரடியில் கிரையம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் நான் வாங்கிய நிலம் விவசாய நிலம் என்பதால் பத்திரப்பதிவின் போது விவசாய நிலமாக பதிவு செய்யவேண்டும் என்று முடிவு செய்தேன். அதன்படி சேலம் மாவட்டம், ஆத்தூர் கிழக்கு பத்திரப்பதிவு அலுவலகத்தில் நிலுவை ஆவண எண் 23/2020 ஆக பத்திரப்பதிவு செய்யப்பட்டு அந்த ஆவணம் மதிப்பறிக்கை மற்றும் வருவாய் ஆவணங்கள் சரிபார்க்க வேண்டியுள்ளதால் நிலுவையில் வைக்கப்படுள்ளது என்றும், நிலுவையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னரே திரும்ப வழங்கப்படும் என்ற விபரத்தையும் தெரிந்துக்கொண்டேன். அதன்பிறகு சுமார் ஒரு வாரம் கழித்து திரு.செந்தில் என்ற வருவாய் ஆய்வாளர் என்னை தொடர்புகொண்டு தாங்கள் வாங்கிய 37 செண்ட் விவசாய நிலம் எங்கு உள்ளது என்றும், தாசில்தார் நிலைத்தை பார்வையிடவருவதாகவும், ஆகையால் அந்த இடத்திற்கு எப்படி வருவது என்றும் விபரம் கேட்டார். நானும் அந்த இடத்திற்கு வரும் வழியைத் தெரிவித்தேன். அதன்பிறகு மறுநாள் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில் அவர்கள் எனது நிலத்தை பார்வையிட செங்காட்டு காலனி என்ற இடத்திற்கு வந்தவரை நான் அழைத்துச்சென்று அந்த நிலத்தை அடையாளம்

காட்டினேன். அவர் எனது விவசாய நிலத்தை பார்வையிட்டுவிட்டு, தாசில்தாரை அழைத்துவந்து மேற்படி இடத்தை காண்பித்து தங்களுக்கு அனைத்து வேலைகளையும் முடித்துதருவதாகவும், அதற்காக தனக்கு தனியாக ரூபாய் 40,000/– கொடுத்துவிடுமாறும் கேட்டார். நான் அதற்கு அவ்வளவு தொகை என்னிடம் இல்லை என்றும், சார் நீங்க பாத்து செய்யுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி ரூபாய் 35,000/– கொடுத்து வேலையை முடிச்சுக்கோங்க என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டேன். என்னால் பணத்தை உடனடியாக ஏற்பாடுசெய்ய முடியாததால் அப்படியே விட்டுவிட்டேன். அதன்பிறகு நிலத்தில் நான் தங்கி மாடுகளை வைத்து பராமரிக்க வேண்டியிருந்ததால், அதற்கு வசதியாக 10 X 20அடி அளவுள்ள, ஓலை கீற்று வேய்ந்த ஒரு கொட்டகை அமைத்தேன். அதற்கு மின் வசதி செய்ய மேற்படி நிலத்திற்குறிய வருவாய் பத்திரம் தேவைபட்டதால் 2021 ம் ஆண்டு மே மாதம் கடைசி வாரத்தில் ஒரு நாள் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில் அவர்களை நரசிங்கபுரத்தில் அவரது வீட்டில் சந்தித்து 37 செண்ட் விவசாய நிலத்தின் பத்திரம் பற்றி கேட்டேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே சொன்ன அமௌண்டை ரெடிபண்ணிட்டு வாங்க, 10 நாட்களுக்குள் பத்திரத்தை கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பிறகு 20.06.2021 ஆம் தேதி காலை சுமார் 7.30 மணியளவில் வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில் அவர்களை நரசிங்கபுரத்தில் அவரது வீட்டில் சந்தித்து என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியவில்லை, கொஞ்சம் குறைத்து செஞ்சிகொடுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் சதுர அடிக்கு 100 ரூபாய் என மனை நிலமாக காண்பித்தால் 13,000 சதுர அடிக்கு 7 %, ரூபாய் 91,000/– ம் வரும், ஆனா நான் விவசாய நிலமாகதான் காட்டபோறேன், அதற்கு நான் உங்களிடம் ரூபாய் 35,000/– மட்டும் தான் கேட்கிறேன் என்றும், தொகையை கண்டிப்பாக கொடுத்தால்தான் பத்திரம் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று சொல்லிவிட்டார். எனக்கு வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில் அவர்களுக்கு லஞ்சமாக ரூபாய் 35,000/– ம் கொடுத்து என்னுடைய நிலத்தின் பத்திரத்தை வாங்க விருப்பமில்லை. எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxx (P.செல்வம்) 21.06.2021.

Sir, Received the above computer typed complaint on 21.06.2021 at 13.00 Hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No. 9/AC/2021 u/s 7 (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 16.15 Hrs. today on 21.06.2021 and directed

Tr.P.Anbalagan, Inspector of Police, V&AC, Salem to take up investigation. Sd xxxx (N.NARENDRAN) 21.06.2021, Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with Original Computer typed complaint of Tr.P.Selvam, S/o Palanisamy, Door No. 351, Palappannai, Veeragoundanur Post, Pethanayakanpalayam Taluk, Salem District is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under the Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

N. Narendran

(N.NARENDRAN), 21.06.21
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.